# அந்தணர் அல்லாதார் அர்ச்சகர் ஆகலாமா?

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: http//dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம் வரும் என்றான் ஒரு கவிஞன். கல்லிலே தெய்வம் வருவது சுலபமான காரியம் அல்ல. உருவ வழிபாட்டைப் பரிகாசம் பண்ணுகிறவர்களுக்கு அதன் மேன்மை புரிவதில்லை. கல்லாய், கட்டையாய், சுண்ணாம்பாய், உலோகக் கலவையாய் இருக்கும் ஒரு பொருளை இறைவன் வந்து குடியேறும் வாசஸ்தலமாக மாற்றிக் காட்டியவன் இந்தியன். வேதங்களிலே விதிக்கப்பட்டபடி சில நியமங்களைக் கடைபிடித்து, சில மந்த்ரங்களை உச்சாடனம் செய்வதால், தெய்வம் மனிதன் செய்த விக்ரஹத்தில் வந்து இறங்கி நிலையாய் அதாவது பிரதிஷ்டையாய் நிற்கும் என்பதை அனுபவத்திலே கண்டு அதை உலகின் நன்மைக்குப் பயன்படுத்தியவன் வைதிகன். அப்படி மந்திரம் கூறி தெய்வத்தை அழைக்க, அழைப்பவனுக்குச் சில தகுதிகள் வேண்டும். இதற்கென்றே ஆசார நியமத்துடன், அடங்கிய மனத்துடன் வாழும் ஒரு வருணத்தில் அவன் பிறந்திருக்க வேண்டும். அதுதான் பிராம்மண வர்ணம். பூண்டும், வெங்காயமும் வெறுத்து, புளிப்பும் உறைப்பும் குறைத்து, சுவை தேடும் நாக்கை ஒடுக்கி, சாத்வீக உணர்வை வளர்க்கும் ஆகாரம் மட்டுமே உண்டு, ராஜஸ மற்றும் தாமஸ குணங்களை உண்டாக்கும் எல்லாப் பழக்கங்களையும் கைவிட்டு, துறவி போல், மிகக் குறைந்த சுக போகங்களை அனுபவித்து வாழ்பவனே உத்தம பிராம்மணன். அப்படி ஒரு பிரிவு ஒரு காலத்தில் இந்த நாட்டில் கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு ஊரிலும் வாழ்ந்தது.

பாட்டரி இருந்தால் தான் டார்ச் லைட் எரியும். மின்சாரம் இருந்தால் தான் காற்றாடி சுழலும். அதுபோல ஒரு குறிப்பிட்ட அலைவரிசை உள்ள மனசுத்தி இருந்தால் தான் வேத மந்திரங்கள் வேலை செய்யும். அந்த அலை வரிசையை எட்டிப் பிடிப்பதற்கு இந்த உத்தம பிராம்மண இனம் எவ்வளவோ தியாகங்களைச் செய்தது. இந்த இனத்தின் மன அடக்கத்தைப் பார்த்து தம்மால் இவ்வளவு மன அடக்கத்தைக் கடை பிடிக்க முடியாது என்று அஞ்சி இவர்களை பூமியில் நடமாடும் தெய்வங்களாக மதித்தார்கள். இது அச்சுறுத்தலால் ஏற்பட்ட அடக்குமுறைச் சட்டம் அல்ல. அன்பினாலும் மனமார்ந்த அறிவுக் கணிப்பினாலும் ஏற்பட்ட மதிப்பீடு! கத்தியும் கையுமாய் அலைந்து களவு செய்து திரிந்த திருமங்கை மன்னன் "தம்மைத் தாமே உயர்த்திக் கொண்டு மற்ற ஜாதியினரை குறைத்துப் பேசும் பிராம்மண கூட்டமே! நீ ஒழிந்து போ" என்று கூறித் தம் ஆயுதங்களால் அத்தனை பிராம்மணர்களின் தலைகளையும் சீவி இருக்கலம் அல்லவா? அவர் அப்படி செய்ய வில்லையே. அவர் அப்ராம்மணர் தானே! மாறாக பதிகத்துக்குப் பதிகம் பிராம்மணர்களை உயர்த்தியும் வணங்கியும் பேசக் காரணம் என்ன?

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி உறைமோர் என்பது போல் ஊரார் வாழும் உலகியல் வாழ்க்கைக்கு பரிகாரங்களைத் தேடிக் கொடுத்து பகவானின் அருளைப் பெற்றுத் தந்து பூமியைச் சொர்க்கமாக்கிக் கொண்டிருந்தான் அந்த நாள் பிராம்மணன். அவன் பரம்பரை நீடு

வாழ்ந்தால் நாட்டுக்கு நல்லதென்று உணர்ந்து ஏனைய வருணத்தார் சமுதாயத்தில் அவனுக்கு முதல் மரியாதை தந்து அவனுக்குத் தாங்கள் பணிந்த போவதை இன்பமாகக் கருதினார்கள்; பெருமையாக நினைத்தார்கள்; அவர்கள் தாமே தாழ்ந்து நின்று தலை வணங்கினார்கள். அவர்கள் தாழ்த்தப்படவில்லை. பிராம்மணன் மற்ற ஜாதிகளைத் தாழ்த்தி விட்டான் என்றும் "நாங்கள் தாழ்த்தப் பட்ட இனம்" என்றும் இன்று குற்றப் பத்திரிக்கை வாசித்துக் கொக்கரிக்கும் பகுத்தறிவாளர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். இன்று இவர்கள் காட்டும் ஜாதிக் கொதிப்பும், சமத்துவக் கொந்தளிப்பும் இவர்களுடைய முன்னோர்களால் அன்று ஏன் காட்டப்படவில்லை? ஏனென்றால் அதற்கு நியாயமான காரணம் இல்லை. பிராம்மணன் உயர்ந்து நிற்பதும் மற்றவன் தாழ்ந்து நிற்பதும் நியாயம் தான் என்று அவர்களே ஒத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சொல்லுவது போல் ஜாதி வேறுபாடுகளுக்கும், தாழ்த்தப்பட்ட இனங்கள் உருவாவதற்கும் பிராம்மணன் தான் குற்றவாளி என்றால் அந்தக் குற்றத்தில் சரிபாதி பொறுப்பு மற்ற ஜாதியினருக்கும் உண்டு. தாழ்த்தியது அவன் குற்றமென்றால் தாழ்ந்து போனது இவர்கள் குற்றமில்லையா? பரஸ்பரம் மனம் ஒத்துச் செய்து கொண்ட ஒரு சமுதாய உடன் படிக்கைக்கு எத்தனை எத்தனை வக்ரமான விளக்கங்கள்? எத்தனை எத்தனை சுயநலக் கொக்கரிப்புகள்? மேலும் சாதிச் சண்டைகள் எங்கேனும் பிராமணர்களால் ஏற்பட்டது என்று இவர்களால் காட்டமுடியுமா?

முத்துக் குளிப்பவன் மகனுக்கு முத்துக் குளித்தல் என்பது பரம்பரைத் தொழில் ஆக எளிதாகக் கைவரும் அல்லவா? மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்பிக்க வேண்டுமா? அதுபோல, இந்த அந்தணர் பரம்பரை பரம்பரையாக வேத மந்திரங்களை உச்சரிப்பதும் அந்த மந்திர சித்திகளில் பயிற்சி பெறுவதும்,விக்ரஹங்களில் தெய்வீக நிலையை வளர்ப்பதும் என்று இப்படியே வாழ்க்கை நடத்தினார்கள். அது அவர்களுக்கு குலத்தொழில் ஆயிற்றே!

பிராம்மண வர்ணத்திலேயே கூட எல்லா பிராம்மணர்களும் அர்ச்சகர் பரம்பரையாய் இருக்க முன் வரவில்லை. ஏனென்றால், இந்தத் தகுதியில் நிலைப்பதற்கு நிறைய கட்டுப்பாடுகள் உண்டு. குளித்து விட்டுக் கோயிலுக்குள் நுழையும் போது ஒரு சாக்கடை ஈ உடம்பில் வந்து உட்கார்ந்து விட்டால், உடனே மறுபடி குளிக்காமல் கோயிலுக்குள் நுழையக் கூடாது. தெய்வத்துக்குப் படைக்கப்படும் பொங்கலும், புளியோதரையும் தான் இவர்களுக்கு ஆகாரம். கோயில் கடைமைகளை விட்டுவிட்டு வெளியூர்ப் பயணம், உல்லாசப் பயணம் முதலியவற்றுக்கு அனுமதியில்லை. தட்டில் விழும் சில்லறைக் காசும் அல்பமான மான்யத் தொகையும் தான் குடும்ப வருமானம். சிறைவாசம் போன்ற இந்த சிக்கலான வாழ்க்கைக்கு அந்தணர்களிலேயே கூட சிலர் தான் முன் வந்தார்கள். கருவிலேயே இறைப்பணி செய்யும் தகுதியை கர்ப்ப தீட்சையாகப் பெற்றார்கள். அந்தப் பரம்பரையினர் தான் இன்று ஆங்காங்கே அர்ச்சகர்களாகப் பணி புரிபவர்கள். மற்றவர்கள் இவர்களுடைய தொழிலுக்கு ஆசைப்படுவது போல இவர்கள் மற்றவர்களுடைய தொழிலுக்கு ஆசைப் படுவதில்லை. அம்மன் கோயில் பூசாரியிடம் கூட இவர்கள் போய் போட்டிக்கு நிற்பதில்லை.

இப்படியெல்லாம் வாழும் இந்த அர்ச்சக இனத்தின் வயிற்றில் அடித்து மற்ற இனத்தார் கருவறைக்குள் இன்று நுழைய விரும்பு கிறார்கள். காரணம் கேட்டால் சாதி சமத்துவம் என்கிறார்கள். இவர்கள் பொறாமைப்படுகிற அளவிற்கு அர்ச்சகர் பணி என்பது செல்வமும் செல்வாக்கும் சுக போகங்களும் கொழிக்கும் துறை அல்ல. அது அவர்களுக்கே தெரியும். அப்படி இருந்தும் இதன் மேல் கண்விழக் காரணம் என்ன? காரணம் இருக்கிறது. அது என்ன என்றும் அதன் விளைவு என்ன என்றும் அடுத்த மாதம் எழுதுகிறேன். (தொடரும்)